2020 ஜனவரி 9]

(அஆ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2020), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் வியாபாரிகளுக்கு சிறிதளவு நல்ல விஷயங்களும் இருக்கின்றன. வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கக்கூடிய விஷயங்களும் இருக்கின்றன. வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கக்கூடிய விஷயங்களைத் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கிறேன். என்னவென்று பார்த்தால், ரூ.49/– payment of tax இருக்கிறது. அதை ஒத்துக்கொள்கிறேன். Interest போடுகிறார்கள். வியாபாரிகள் தொழிலில் முதலீடு செய்து, அதற்கான பணம் அவர்களுக்கு திரும்ப வருவதற்கு 60 நாட்களிலிருந்து 150 நாட்கள் வரை ஆகின்றன.

பிற்பகல் 3–00

ஒரு மாதத்தின் முடிவிலேயே அந்த interest–ஐ final audit–ல் போட ஆரம்பித்துவிடுவீர்கள். உதாரணத்திற்கு, ரூ.100/–க்கு வியாபாரம் செய்கிறார் என்றால், 28% GST விதிக்கப்பட்டால், மூன்று மாதங்களுக்கு சுமார் ரூ.90/– என்று கணக்கிடப்படும். அப்போது, அவரது மொத்த மூலதனமுமே அந்த GST–ல் போய்

@ **9–1–2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அடங்கிவிடுகிறது. அதற்கு 18% வட்டி விதிக்கப்போவதாக தற்போது சொல்லியிருக்கிறார்கள். வங்கிகளிலேயே 12% வட்டிதான் விதிக்கப்படுகிறது. இருக்கின்ற மொத்த முதலீட்டையும் GST ஆக செலுத்திவிட்டு, தொழில் செய்வதற்கு பணம் இல்லாமல் நடுரோட்டில் நிற்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

அதற்கடுத்ததாக, ஒவ்வொரு மாதமும் Furnishing of Returns–ல், “within such time as may be prescribed, subject to conditions” என்று கொடுக்கப்பட்டுள்ளது.Withinsuchtimeஎன்றால்ஒவ்வொருமாதமும் 10 ஆம் தேதிக்குள் GSTR–1 தாக்கல் செய்யவில்லையென்றால், ஒரு நாளைக்கு ரூ.200/– fine என்று இப்போது notification வந்திருக்கிறது. GSTR–3B தாக்கல் செய்யவில்லையென்றால், ஒரு நாளைக்கு ரூ.50/– fine என்றும் notification வந்திருக்கிறது. மேலும், அவர்கள் அந்த மாதத்திற்குள் சரியாகச் செலுத்தவில்லையென்றால், e–way bill–ஐ முடக்கம் செய்வோம்; அவ்வாறில்லாமல் 2, 3 மாதங்களாகிவிட்டால் Best Judgement Assessment முறையில் recovery procedure மூலமாக அவர்களது வங்கிக் கணக்கையே முடக்குவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் GST Council கூட்டம் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. GST Council–ல் நமது அரசாங்கத்தின் சார்பாக நீங்கள் சென்று பங்கேற்கிறீர்கள். எங்கள் தலைவர் அவர்கள் VAT–ஐ அமல்படுத்தியபோது, நிறைய முறை வியாபாரிகளைச் சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்தார். என்னென்ன குறைகள் என்பதை நேரடியாகச் சந்தித்துக் கேட்டார். அதேமாதிரி நீங்களும் வியாபாரிகளைக் கேளுங்கள். அவர்கள் இன்றைக்கு மிகவும் கஷ்டமான ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள். உலகப் பொருளாதாரமும், இந்தியப் பொருளாதாரமும் மிகவும் சீரழிந்து போய், கீழ்மட்ட அளவிலே இருக்கிறது என்று ஆளுங்கட்சி உறுப்பினர்களேகூட சொன்னீர்கள். இப்படியிருக்கக்கூடிய சூழ்நிலையில் GST விதித்து, ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்று சொல்கிறீர்கள். வியாபாரிகள் அனைவரும் படித்தவர்கள் கிடையாது; எல்லோரிடமும் Computer கிடையாது. ஒரு கணக்காயரை நியமித்துக்கொள்ள வேண்டுமென்றால்கூட 5 ஆயிரம் ரூபாய் சம்பளம் தர வேண்டும். அவர்கள், 10 ஆம் தேதி, 20 ஆம் தேதி என்று timing–க்குள் வரி செலுத்துவது என்பது நடைமுறைக்கு ஒவ்வாத விஷயம். வியாபாரிகள் அனைவரும் மிகவும் நலிந்த நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவினை திராவிட முன்னேற்றக் கழகம் மிகவும் கடுமையாக எதிர்க்கிறது என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவையெல்லாம் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்திலே எடுக்கக்கூடிய முடிவுகள். இது வணிகர்களுடைய கோரிக்கைக்கேற்ப அவ்வப்போது மாற்றம் செய்யப்படுகிறது. 'ஒரே நாடு, ஒரே வரி' என்கின்ற அடிப்படையிலே இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிறது. ஆகவே, இந்த காலகட்டங்களில், ஏதாவது நெருக்கடிகள் வணிகர்களுக்கு ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் வந்தால், அவ்வாறு பாதிப்புகள் ஏற்படும்பட்சத்திலே, மீண்டும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்திலே (GST Council) மாநில அரசின் சார்பாக நாங்கள் தொடர்ந்து வற்புறுத்தி, அவற்றில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வணிகர்களுக்கு உறுதுணையாக இருக்கும். இது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தினால் இயற்றப்பட்ட முடிவு. அந்த மன்றத்தை அங்கீகரித்து, நம் மாநில அரசும் அதைப் பின்பற்ற வேண்டுமென்ற அடிப்படையிலேதான் நடைமுறைப்படுத்துகின்றது. இது GST Council-ல் எடுக்கப்பட்ட முடிவு. ஆகவே, கிட்டத்தட்ட நீங்கள் சொன்னதுபோல், கடந்த காலங்களில் வணிகர்களுடைய கோரிக்கைகளை மாநில அரசு, மத்திய அரசினுடைய GST Council-க்கு எடுத்துச் சென்று பல்வேறு மாற்றங்களை நாங்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். வணிகர்களுடைய சிரமங்களையெல்லாம் போக்குவதில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதுணையாக இருந்திருக்கின்றது. ஆகவே, எதிர்வரும் காலங்களில்கூட, சிரமங்கள் ஏற்படாமல் வணிகர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்று சொல்லி, இந்தச் சட்டத்தினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 23 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 23 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஇ) தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 *ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்* 14/2020*), மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 *ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்* 14/2020)@ *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 3-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், சொல்லுங்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் நோக்கமாகக் குறிக்கப்பட்டிருக்கக்கூடியதில்* 1976 *ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின்*

@ 9—1—2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.